**செய்தி வெளியீடு எண் : 929** **நாள்: 08.06.2022**

<u>செய்தி வெளியீடு</u>

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.81 கோடியே 31 இலட்சம் செலவில் முடிவுற்ற 140 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.166.84 கோடி மதிப்பீட்டிலான 1,399 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48,868 பயனாளிகளுக்கு ரூ.370 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (8.6.2022) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், 81 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 140 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 166.84 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1,399 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48,868 பயனாளிகளுக்கு 370 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<u>திறந்து வைக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரங்கள்</u>

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு திட்டம், அங்கன்வாடி மையக் கட்டடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பயணியர் நிழற்குடை, பேவர் பிளாக் சாலை அமைத்தல், ஊராட்சி அலுவலகக் கட்டடம், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல் உள்ளிட்ட 10 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 34 முடிவுற்ற திட்டப் பணிகள்;

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

புதுக்கோட்டை நகரம், கே.எல்.கே.எஸ் நகரில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி, அசோக்நகர், பொன்நகர், குறிஞ்சி நகர், சின்னப்பாநகர் மற்றும் மச்சுவாடி தைலாநகர், வ.உ.சி நகர் பகுதிகளுக்கு புதிதாக பி.வி.சி பகிர்மானக் குழாய் அமைத்தல், மச்சுவாடி நீர் உந்து நிலையம், மின் மோட்டார் அறை மற்றும் நீர்த்தேக்கத்தொட்டி முள் கம்பி அமைத்தல், அம்மையாப்பட்டி நீரேற்று நிலையம் டி-1 குடிநீர் இணைப்புக் குழாய் மாற்றி அமைத்தல் மற்றும் முள் கம்பி அமைத்தல், போஸ்நகர் மற்றும் சண்முகா நகர் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் வள மீட்பு மையம் அமைத்தல், திருவப்பூரில் காவேரி குடிநீரில் வாயு குளோரினேஸன் அமைத்தல் உள்ளிட்ட 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 12 முடிவுற்ற திட்டப் பணிகள்;

பேரூராட்சிகள் துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ், 7 இலட்சம் ரூபாய் செலவில் கறம்பக்குடி பேரூராட்சி வடக்குத் தெரு ரேசன் கடை கட்டடம்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

தேசிய ஆயுஷ் குழுமம் - தமிழ்நாடு திட்டத்தின்கீழ், 15 இலட்சம் ரூபாய் செலவில் அண்டக்குளத்தில் சித்த மருத்துவமனை புதிய கட்டடம்;

திருமயம் அரசு மருத்துவமனையில் 10 புதிய டயாலிஸிஸ் இயந்திரம், வல்லத்திராக்கோட்டை, ஆவூர் ஆகிய இடங்களில் செவிலியர் குடியிருப்புக்கட்டடம், கீழாத்தூர், பூவரசகுடி, கல்லாலங்குடி, ஆலங்காடு, மாதிரிப்பட்டி, அகரப்பட்டி, இராஜகிரி, மருதம்பட்டி, மாத்தூர், விரலூர், எண்ணை ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையம், மண்டையூரில் சுகாதார நலப்பூங்கா, ஆவூர் மற்றும் பரம்பூரில் வெளிநோயாளிப்பிரிவு கட்டடம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மாவட்ட மனநல மையத்திற்கு ஆக்சிஜன் உருளைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட 4 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் 26 முடிவுற்ற திட்டப் பணிகள்;

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

நபார்டு திட்டத்தின்கீழ், தாஞ்சூர், மணமேல்குடி, நாகுடி, பெருமருதூர், செம்பூதி, ஒலியமங்களம், ஆலங்குடி, பெருஞ்சுனை மற்றும் கீரனூரில் கால்நடை மருந்தகக் கட்டடம், பொன்னமராவதி, புதுக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டையில் கால்நடை மருத்துவமனை கட்டடம் என 5 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 12 முடிவுற்ற திட்டப் பணிகள்;

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை

புதுக்கோட்டையில் மாவட்ட இசைப்பள்ளி கட்டடம், உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கான கட்டடங்கள் என 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற திட்டப் பணிகள்;

பள்ளிக் கல்வித்துறை

அனைவருக்கும் இடைநிலைக்கல்வி திட்டத்தின்கீழ், புதுக்குடி, லெம்பலக்குடி, அண்டக்குளம், நார்த்தாமலை, பெருங்களூர், எல்லைபட்டி, மழையூர் மற்றும் புதுக்கோட்டை இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம், கலை / கைவினை அறை, நூலகம், கணினி அறை மற்றும் கழிப்பறைக் கட்டடங்கள் என 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 9 முடிவுற்ற திட்டப் பணிகள்;

நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை

அரசமலை, மணமேல்குடி, அறந்தாங்கி குறுவட்ட நிலஅளவர்களுக்கான அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் என 52 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை

புதுக்கோட்டையில் அன்னை சத்தியா நினைவு குழந்தைகள் காப்பக கட்டடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மண்ணவேளாம்பட்டி, வலையப்பட்டி, மங்களநாடுகிழக்கு, கொப்பனாப்பட்டி, கருப்புக்குடிப்பட்டி, ஆதனக்கோட்டை, கீழாத்தூர், ராசிபுரம், கே.நாங்குபட்டி, மருதம்பட்டி ஆகிய இடங்களில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் என 10 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

பாலக்குடி மற்றும் கோட்டைப்பட்டிணத்தில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள், கிருஷ்ணாஜி பட்டிணம் மற்றும் கோட்டைப்பட்டிணத்தில் மீன் உலர் களம் என 30 இலட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

திருநாளுர், செங்கமாரி, சேந்தான்குடி நகரம் ஆகிய இடங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டடங்கள், விராலிமலையில், புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டடம் என 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கில், 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம்;

## தொழிலாளர்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை

புதுக்கோட்டை தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் 50 மாணவிகள் மற்றும் 100 மாணவர்கள் தங்கும் விடுதிக் கட்டடங்கள் என 4 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

நபார்டு திட்டத்தின்கீழ், 38 இலட்சம் ரூபாய் செலவில் பிராமணவயல். துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம்;

## உயர்கல்வித்துறை

மாநில நிதியின்கீழ், புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் 5 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம், கறம்பக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் என 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற திட்டப் பணிகள்;

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், பாலன் நகர் பகுதியில் 192 குடியிருப்பு, இலுப்பூரில் 96 குடியிருப்பு, இடையப்பட்டியில் 96 குடியிருப்பு என 32 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 384 குடியிருப்புகள்;

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், புதுக்கோட்டை, பொன்னமராவதி, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை, திருமயம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களிலும், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டையில் திலகர் திடல், டி.வி.எஸ் கார்னர், புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலக வளாகம் என 15 இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் சிறுதானிய விற்பனை நிலையங்கள்;

**என மொத்தம் 81 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 140 திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டப் பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தின் முதல் தளத்தில் பார்வையாளர்கள் தங்குவதற்கான கட்டடம், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை நகராட்சி, பெரியார் நகர் பூங்கா மேம்பாடு செய்தல், அறந்தாங்கி நகராட்சியில் சூர்ய மூர்த்திகுளம், பாப்பான்குளம் புனரமைப்பு செய்தல், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் சிவானந்தபுரத்தில் மழைநீர் வடிகால் கட்டுதல், புதுக்கோட்டை நகர் பகுதிகளில் 14 இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட 11 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 27 திட்டப் பணிகள்;

**பேரூராட்சிகள் துறை** சார்பில் நபார்டு நிதியின்கீழ் அரிமளம் பேரூராட்சியில் சுள்ளான் பட்டி, கீரனூர் பேரூராட்சியில் பாரப்பட்டி - ஈச்சங்காடு கேர் காலனி, ஈகை நகர், கீரமங்கலம் பேரூராட்சியில் திருவள்ளுவர் சாலை, வ.உ.சி சாலைகளில் தார்சாலை பணிகள் அமைத்தல் என 4 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 திட்டப் பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி மானியத்தின்கீழ் திருமயம் மற்றும் குன்றாண்டார்கோவில் ஆகிய இடங்களில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஊராட்சி அங்காடி கட்டடம் கட்டுதல், சமுதாயக் கூடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள் மற்றும் கலையரங்கங்கள், தேக்காட்டூர் இலங்கை அகதிகள் முகாமில் 58 புதிய வீடுகள், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல், பள்ளிகளுக்கு கணினி வழங்குதல் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜெனரேட்டர் மற்றும் உதிரி பாகங்கள் வழங்குதல், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 62 சாலைகள் மேம்பாடு, நபார்டு திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, இரண்டு கூடுதல் பாலங்கள் உள்ளிட்ட 85 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,324 திட்டப் பணிகள்;

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

வம்பன் கிராமத்தில் 12 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 110/22 KV. புதிய துணைமின் நிலையம் அமைக்கும் பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

காரையூரில் ப்ராஸ்டேட் சுரப்பி வீக்கப் பிரிவு (BPH Unit), வல்லத்திராக்கோட்டை, புலியூர், உடையாளிப்பட்டி, மருதூர், கொடும்பாளூர், சுனையக்காடு, ஆலத்தூர், தாழனூர், சேமன்கோட்டை, அடம்பூர் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையம், நாகுடியில் வட்டார அலுவலகம் என 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 திட்டப் பணிகள்;

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை

மங்களநாடு, வண்ணான்காடு, நமணசமுத்திரம், ஏம்பல், குரும்பூண்டி, நடுப்பட்டி, சுந்தம்பட்டி, மீனாம்பட்டி, மூட்டாம்பட்டி, ராக்காத்தான்பட்டி, ஆலவயல், மேமனப்பட்டி, வாராப்பூர், கேடையப்பட்டி, கூத்தாச்சிப்பட்டி, செட்டியாப்பட்டி, பாப்பாவயல், கல்லாலங்குடி, மைக்கேல்பட்டி, தோப்புப்பட்டி ஆகிய இடங்களில் 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டும் பணிகள்;

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

புதுக்கோட்டை நகரம் பிள்ளைதண்ணீர் பந்தலில் 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டும் பணி;

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

புதுக்கோட்டை நகரம் வணிகவரி அலுவலகத்தின் முதல் தளத்தில் 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட புதுக்கோட்டை - 3 அலகிற்கான கட்டடம் கட்டும் பணி;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

பேரானூர், ஆதனக்கோட்டை ஆகிய இடங்களில் 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் கட்டும் பணி;

நெடுஞ்சாலைத்துறை (நபார்டு மற்றும் கிராம சாலைகள்)

16 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசர்குளம் சாலை மருதங்குடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் மற்றும் ஆலங்குடி சாலை, ராஜகிரி சாலை கொடியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிகள்;

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை

முத்துக்குடா கடற்கரையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், படகுசவாரி மற்றும் நடைபாதை வசதி ஏற்படுத்தும் பணி;

**மேலும், பல்வேறு அரசு துறைகளில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டப் பணிகள் என மொத்தம் 166 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 1,399 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.**

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி, உழவர் பாதுகாப்பு திட்டம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் கடனுதவிகள், புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பெட்ரோல்

ஸ்கூட்டர், முதுகுதண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்யேக வாகனம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்பிடி தடைக்கால நிவாரணம், மீனவர்களுக்கு நாட்டுப் படகு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கூட்டுப் பண்ணை திட்ட உபகரணங்கள், கலைஞர் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 600 தென்னங்கன்றுகள் வழங்குதல், வேளாண் பொறியியல் துறை சார்பில் சூரிய ஒளி மின்மோட்டார், தோட்டக்கலைத் துறை சார்பில் நடமாடும் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை வண்டி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 550 வீடுகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் கட்டுமான தொழிலாளர்கள் ஓய்வூதியம், கல்வி மற்றும் இயற்கை மரண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 48,868 பயனாளிகளுக்கு 370 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.எம்.அப்துல்லா, திரு.சு.திருநாவுக்கரசர், செல்வி.எஸ்.ஜோதிமணி, திரு.நவாஸ்கனி, திரு.கார்த்திக் ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, திரு.எஸ்.டி.ராமச்சந்திரன், திரு.எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

…………

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in